**செய்தி வெளியீடு எண்: 870** **நாள்: 29.11.2018**

# செய்தி வெளியீடு

**தீபாவளி பண்டிகையின் போது சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருள் விதிகளை மீறிய 325 வணிக நிறுவனங்களின் மீது தொழிலாளர் துறை அதிரடி நடவடிக்கை**

தொழிலாளர் துறை நுகர்வோர் நலனை காப்பதில் முன்னோடியாக விளங்கி வருகிறது. இதன் பொருட்டு சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் மாதந்தோறும் தமிழகத்திலுள்ள அனைத்து கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகையில் நவம்பர் மாதம் தீபாவளி பண்டிகை காலம் என்பதால் அக்டோபர் மாதத்தில் அனைத்து கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், சூப்பர் மார்க்கெட்டுக்கள், புரொவிசன் ஸ்டோர்ஸ் ஆகிய நிறுவனங்களில் சட்டமுறை எடையளவு பொட்டலப் பொருள்கள் விதிகளின் கீழ் மாவட்டம் தோறும் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் (செயலாக்கம்) தலைமையில் ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா. நந்த கோபால், இ.ஆ.ப., அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரெட்டு பாக்கெட்டுக்களை தமிழ்நாட்டில் விற்பனை செய்யும் போது சிகரெட் பொட்டலங்கள் இறக்குமதி செய்பவர் முறையாக இறக்குமதி உரிமம் இன்றியும், பொட்டலப் பொருள் விதிமுறைகளை அனுசரிக்காமலும் விற்பனை செய்யப்படுவதாக புகார் பெறப்பட்டதன் அடிப்படையில் உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க தொழிலாளர் ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர் ஆணையர் அறிவுரைக்கிணங்க தீபாவளியை முன்னிட்டு கடந்த அக்டோபர் மாதத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமுலாக்கம்) மூலம் பண்டிகை கால சிறப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் பல்வேறு நிறுவனங்களை ஆய்வு செய்து சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருள்) விதிகளின்படி பொட்டலமிடுபவர் பெயர், முழு முகவரி, நுகர்வோர் பாதுகாப்பு எண், மின்னஞ்சல் முகவரி, பொருளின் பெயர், பொருளின் நிகர எடை, எண்ணிக்கை, பொட்டலமிடப்பட்ட ஆண்டு, அதிக பட்ச சில்லறை விற்பனை விலை (அனைத்து வரிகளும் உட்பட) ஆகிய சட்ட ரீதியான விவரங்கள் இன்றி பொட்டலப் பொருட்கள் விதிகளை மீறி விற்பனை செய்த 325 கடைகள் மற்றும் நிறுவனங்கள் மீதும், மேலும் நவம்பர் மாதத்திலும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி உரிமம் பெறாமலும், அதிகபட்ச சில்லறை விற்பனை விலை குறிப்பிடாமலும் வெளிநாட்டு சிகரெட்டுகள் விற்பனை செய்த 20 கடைகள் மீதும் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அபராதமாக ரூ.17,25,000/– வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் விற்கப்படும் பொட்டலப் பொருட்கள் மீது சட்டரீதியான அறிவிப்புகள் இல்லாதது, பொருளில் குறிப்பிட்ட அதிகபட்ச சில்லறை விலையைவிட அதிக விலைக்கு விற்பது நியாய விலைக் கடைகளில் அளவு குறைவாக விநியோகம் செய்வது, பெட்ரோல் / டீசல் பம்புகளில் அளவு குறைவாக விற்பனை செய்வது போன்ற எடையளவு குறைபாடுகள் குறித்த புகார்களை தெரிவிக்க தொழிலாளர் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் TN-LMCTS (Tamil Nadu Legal Metrology Complaint Tracking System) என்ற கைபேசி செயலியை Google Playstore மூலம் பதிவிறக்கம் செய்து அதன் வாயிலாக நுகர்வோர்கள் / பொதுமக்கள் புகார் அளித்து உரிய நிவாரணம் காணலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**